***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT Mannargudi***
***CC.No. 109/2022 P.W. 1 LW1***

| | |
|---|---|
| *Name* | சிவானந்தம் |
| *Father/Husband's Name* | கல்யாணசுந்தரம் |
| *Village* | |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | |

***எதிரி ஆஜர் .***
*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 08.05.2025*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன நபர் எனது மூத்த மகன் .

2) கடந்த 02.05.2021 ஆம் வருடம் எனது மூத்த மகன் பாலமுருகன் மன்னார்குடி கூட்டுறவு பால்சொசைட்டியில் வேலைக்கு சென்றிருந்தார். அப்போது விடியற்காலை 4.00 மணியளவில் பால்சொசைட்டி கட்டிடத்திற்குள் எனது மகன் படுத்திருந்தபோது பால் ஏற்றுவதற்காக சொசைட்டிக்கு வந்த பால் டேங்கர் லாரி ரிவேஷ்சில் வந்து என் மகனின் பின் தலையில் ஏறியது. பால்சொசைட்டியில் வேலை செய்யும் சங்கர் என்பவர் 4.30 மணியளவில் எனக்கு தொலைபேசி மூலம் தகவல் சொன்னார். நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது எனது மகன் தலையில் ரத்தத்துடன் இறந்து கிடந்தார். பிறகு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம் , அன்றைய தினமே காவல்நிலையம் சென்று புகார் மனு அளித்தேன். **மேற்படி புகார் மனு அசாஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** விபத்து ஏற்படுத்திய பால் டேங்கர் லாரியை ஓட்டியது ஈரோடை சேர்ந்த ஸ்ரீதர் என்ற விவரம் தெரிந்து கொண்டேன். விபத்து சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் முதல் விசாரணையில் சொன்ன விவரங்கள் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நானும் மன்னார்குடி கூட்டுறவு பால்உற்பத்தி சங்கத்தில் வேலை பார்த்து பணி ஓய்வு பெற்ற நபர் என்றால் சரிதான்.

2) எனது புகாரானது என்னால் எழுதப்பட்டதல்ல, என்னுடைய மகன் இறந்து விட்டதால் பதட்டமான சூழ்நிலையில் இருந்ததால் படித்து பார்க்கவில்லை என்றால் என்னிடம் படித்து காட்டினார். அதில்நான் கையொப்பம் செய்தேன். மேற்படி பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் மேற்கு புறமாக உள்ள தனிக்கட்டிடம் என்றால் சரிதான். அந்த கட்டிடத்தின் பால் குளிர்பதனம் செய்யும் இடம் பின்புறமாக கீழ்புறம் வரை நீண்டுள்ளது என்றால் சரிதான்.

3) பால் உற்பத்தியாளர் கூட்டறவு சங்கத்திற்கு கீழ்புறம் முன் பகுதியில் மன்னார்குடி கிராம நிர்வாக அலுவலருடைய அலுவலகம் உள்ளது . அது இரவு நேரத்தில் பூட்டப்பட்டிருக்கும ் என்றால் சரிதான். கூட்டுறவு சங்கத்திற்கும் கிராம நிர்வாக அலவலகத்திற்கும் நடுவில் காம்பவுண்ட் சுவர் உள்ளது என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலகத்திற்கு கீழ்புறமாக லாரியானது உள்ளே வந்து பின்னால் உள்ள குளிர்பதன நிலையத்திலிருந்து குழாய் மூலம் வரும் பாலை டேங்கரில் நிரப்பும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4) மேற்படி இடத்திற்கு தினமும் டேங்கர் லாரி வந்து பாலை நிரப்பி வெளியூர்களுக்கு எடுத்துக்கொண்டு செல்வது வழக்கம் என்று சொன்னால் சரிதான். கிராம நிர்வாக அலுவலகத்திற்கு உள்ளே அறை பூட்டப்பட்ட நிலையிலும் முன்புறம் வராண்டா பகுதி உள்ளது என்றால் சரிதான்.

5) எனது மகன் அடிப்பட்டு கிடந்ததாக சொல்லப்படும் இடம் திறந்த வெளிப்பகுதி என்றால் சரிதான். எனது மகனுக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். அவருக்கு குடிப்பழக்கம் இருந்ததா என்றால் இல்லை. அவருக்கு குடிப்பழக்கம் இருந்து பலமுறை அலுவலகத்திலிருந்து அவருக்கு Charge Memo

கொடுக்கப்பட்டுள்ளது என்றும், தற்போது வழக்கிற்காக குடிப்பழக்கம் இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6) புகார் கொடுத்த பிறகு போலீசார் என்னை மீண்டும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

ஒம்/–ஜெ.தமிழ்முருகன்,
நீதித்துறை நடுவர் எண்.1,
மன்னார்குடி